# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.

முன்னிலை : **செல்வி. N. திலகேஸ்வரி, B.Sc., LLM.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ)**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**

2023-ஆம் ஆண்டு, ஜூலை திங்கள், 26-ஆம் நாள், புதன்கிழமை

**I.A. No. 1 of 2022 in O.S. No. 102 of 2012**
**(CNR No. TNSA-1300-0212-2012)**

A. முர்த்தி .. மனுதாரர் / வாதி

எதிர்

A. ராஜேந்திரன் .. எதிர்மனுதாரர் / பிரதிவாதி

இம்மனுவின் மீதான விசாரணையானது, கடந்த 22.06.2023-ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, மனுதாரர் / வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. V.R. ராஜேந்திர மகாஜன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. P. சிவராஜன் அவர்கள் ஆஜராகியும் இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## உத்தரவு

மனுதாரர் / வாதி இம்மனுவை நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து தாவா சொத்துக்களின் இயற்கை அமைப்பு மற்றும் தாவா சொத்துக்களின் அளவுகளை நில அளவையரின் உதவியுடன் அளவீடு செய்து நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிடுமாறு கேட்டு தாக்கல் செய்துள்ளார்.

2. **<u>மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :</u>** மனுதாரரர் தனது மனுவில், தனது தகப்பனாருக்கு பூர்வீகமாகவும், பரம்பரையாகவும் 10 ஏக்கர் நிலம் இருந்ததாகவும் அதனை தானும் தனது சகோதரரான எதிர்மனுதாரரும் மற்ற சகோதரர்களுடன் சேர்ந்து கூட்டுக் குடும்பமாக அனுபவித்து வந்ததாகவும், தங்களது சொத்து பூராவும் கிழமேலாக நீளமாக அமைந்திருப்பதால் அனைத்து பகுதிகளுக்கும் போகவர வண்டி வாகனங்கள் எடுத்துச் செல்லவும், தாவா வண்டிப்பாதையினை அவர்கள் பன்னெடுங்காலமாக பயன்படுத்தி வந்ததாகவும், எதிர்மனுதாரர் புல எண் 274/1 மற்றும் 274/5-ல் உள்ள நிலங்களின் மொத்த 15 அடி அகல வண்டித்தடம் உள்ளதாக தனது வழக்குரையில் கூறியும், இவ்வழக்கில் பதிலுரையிலும் கூறியுள்ளதாகவும், புல எண் 272/1-ல் வண்டிப்பாதை இல்லையென்றும் எதிர்மனுதாரர் கூறியிருப்பது தவறு என்றும், எதிர்மனுதாரர் தன் மீது அசல் வழக்கு எண் 67/2012-ஐ தாக்கல் செய்திருப்பதாகவும், எதிர்மனுதாரர் தனது ஆள்பலத்தாலும், பணபலத்தாலும் புல எண் 272/1-ல் உள்ள வண்டி தடத்தினை கொஞ்சம் கொஞ்சமாக வடபுறம் உள்ள ஓடை வரை ஆக்கிரமிப்பு செய்து கொண்டதாகவும், புல எண் 272/1-ல் உள்ள வண்டிப்பாதையில் எதிர்மனுதாரர் சோளப் பயிர்களை பயிரிட்டிருப்பதாகவும், மனுதாரரின் வீட்டிற்கு கிழபுறம் உள்ள பகுதியிலும் புல எண் 274/1 மற்றும் 5-ல் உள்ள வண்டிப்பாதை பெரும்பாலும் முட்புதர்களாலும், மரங்களாலும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது என்றும், பொது கிணற்றுக்கும் புல எண் 274/1-க்கு தென்புறத்தில் மூன்று பனைமரங்கள் இருப்பதாகவும், பனை மரங்களுக்கும் பொது கிணற்றுக்கும் இடையில் உள்ள நிலத்தில் வண்டிவாகனம் செல்ல இயலாது என்றும், நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடத்தில் வண்டிப்பாதையின் உண்மையான அமைப்பினை குறிப்பிட்டு தாக்கல் செய்யப்படவில்லை என்றும், எனவே நில அளவையரை வைத்து தாவா சொத்தை அளந்து பார்த்து அத்து காட்டவும் நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமிக்க வேண்டுமென்று கேட்டு இம்மனுவை தாக்கல் செய்திருப்பதாக கூறியுள்ளார்.

3. **<u>எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :</u>** எதிர்மனுதாரர் / பிரதிவாதி தனது எதிருரையில், அசல் வழக்கு எண் 67/2012 மற்றும் 102/2012-லும் ஒரே சொத்துக்கள் தான்

காட்டப்பட்டுள்ளது என்றும், அந்த சொத்துக்களை ஏற்கனவே நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்துவிட்டதாகவும், அந்த அறிக்கைக்கு மூன்று முறை மனுதாரர் / வாதியும் தனது ஆட்சேபனையை தாக்கல் செய்துவிட்டதாகவும், நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்யக் கோரிய மனுக்களும் முடிக்கப்பட்டுவிட்டதாகவும், ஏற்கனவே தாக்கல் செய்த நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடத்தினை நீக்கம் செய்யாமல் மீண்டும் ஒரு நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்ய கோர இயலாது என்றும், இவ்வழக்கின் இறுதியில் தான் நீதிமன்றம் மனுதாரர் / வாதி தாக்கல் செய்துள்ள நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடம் சம்மந்தமாக ஆட்சேபனைகள் குறித்து முடிவு செய்ய இயலும் என்றும், ஏற்கனவே வழக்கில் விசாரணை தொடங்கப்பட்டு வா.சா.1-ல் முதல் விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு நிலுவையில் இருந்து வருவதாகவும், இந்த சூழ்நிலையில் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும் கூறியுள்ளார்.

4. இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

5. அசல் வழக்கானது மனுதாரர் / வாதியால் எதிர்மனுதாரர் / பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு எண் 67/2012-ஆனது இவ்வழக்கின் எதிர்மனுதாரர் / பிரதிவாதியால் இம்மனுவின் மனுதாரர் / வாதிக்கு எதிராக இவ்வழக்கின் தாவா சொத்துக்களைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதும், இரு வழக்குகளிலும் ஒன்றாக விசாரணை செய்யப்பட்டு வருகிறது என்பதும், இரு வழக்குகளிலும் ஒரே சொத்துக்கள் தாவா சொத்துக்களாக காட்டப்பட்டுள்ளது என்பதும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில் தெரியவருகிறது. அசல் வழக்கு எண் 67/2012-ல் வா.சா.1 08.03.2022 அன்று சாட்சிய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு அவரது குறுக்கு விசாரணைக்காக வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. இந்த சூழ்நிலையில் அசல் வழக்கு எண் 102/2012-ல் மனுதாரர் / வாதி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். இரு வழக்குகளின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிர்மனுதாரர் / பிரதிவாதி கூறியுள்ளதுபோல இ.ம.வ. எண்.348/2012-ல் எதிர்மனுதாரர் / பிரதிவாதியால் மனு

தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்ற ஆணையரும் நியமனம் செய்யப்பட்டு தாவா சொத்தை பார்வையிட்டு அவர் அறிக்கை மற்றும் வரைபடமும் தாக்கல் செய்துள்ளார் என்பது தெரியவருகிறது. மேலும் மீண்டும் இம்மனுவின் மனுதாரர் / வாதியே அசல் வழக்கு எண் 67/2012-ல் இ.ம.வ. எண். 434/13-ஐ உரிமையியல் நடைமுறைச் சட்டம் உத்தரவு 26 விதி 9-ன்கீழ் தாவா சொத்துக்களை மீண்டும் பார்வையிட ஆணையர் நியமனம் கேட்டு மனு தாக்கல் செய்து அம்மனுவும் அனுமதிக்கப்பட்டு நீதிமன்ற ஆணையரும் தனது அறிக்கை மற்றும் வரைபடத்தினை தாக்கல் செய்துள்ளார் என்பதும் தெரியவருகிறது. இ.ம.வ. எண்.437/2013-ல் இம்மனுவின் மனுதாரர் / வாதி இதே தாவா சொத்துக்களை வண்டிப்பாதையின் தொடர்ச்சி எதிர்மனுதாரர் / பிரதிவாதியின் வீட்டிலிருந்து தொடர்ந்து சென்று கருமந்துறை - ஆத்தூர் செல்லும் தார் சாலையில் இணையும் பகுதியை பார்வையிட்டு கூடுதல் அறிக்கை மற்றும் வரைபடத்தை தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டி உத்தரவும் பிறப்பிக்கப்பட்டு நீதிமன்ற ஆணையரால் அறிக்கை மற்றும் வரைபடமும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதும் தெரியவருகிறது. மீண்டும் தற்போது எதிர்மனுதாரர் / பிரதிவாதிக்கு சொந்தமான புல எண் 272/1-ல் சேலம் - கருமந்துறை மெயின்ரோட்டினை ஒட்டினாற்போல வடபுறம் ஓரமாக தென்கிழக்கு பகுதியை நோக்கி சென்று பின்னிட்டு தெற்கு நோக்கி தங்களது பூர்வீக வீட்டிற்கு கிழபுறத்திற்கு தெற்கு பகுதி வரை 15 அடி அகலமுள்ள வண்டிப்பாதை செல்வது குறித்து முடிவு செய்ய வேண்டியது அவசியம் என்றும், தாவா பாதையினை அளந்து அத்து காண வேண்டுமென்றும் கூறியுள்ளார். மேலும் மனுதாரர் தன்னுடைய மனுவில் புல எண் 272/1-ல் வண்டிப்பாதை இருந்த இடத்தை எதிர்மனுதாரர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாகவும் கூறியுள்ளார். ஏற்கனவே இரு தொடர்பாக தான் அசல் வழக்கு எண் 67/2012-ல் இதே மனுதாரர் இம்மனுவின் எதிர்மனுதாரர் / பிரதிவாதி வீட்டிலிருந்து தொடர்ந்து தாவா வண்டிப்பாதை கருமந்துறை - ஆத்தூர் சேலம் தார் சாலை வரையிலும் சென்று இணையும் பகுதியினை பார்வையிட வேண்டுமென்று கேட்டு இ.ம.வ. எண்.434/2013 தாக்கல் செய்து உத்தரவும் பெற்றுள்ளார் என்பதும் தெரியவருகிறது. எனவே ஏற்கனவே எதிர்மனுதாரர் / பிரதிவாதி வீட்டிலிருந்து கருமந்துறை - ஆத்தூர் தார் சாலையில் முடிவடைவது குறித்து நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்பது தெரியவருகிறது.

.. 5 …

மேலும் மனுதாரர் / வாதியே தன்னுடைய மனுவிலேயே மேற்படி வண்டிப்பாதையானது 15 அடி அகலத்தில் அமைந்துள்ளதாக தான் கூறியுள்ளார். எதிர்மனுதாரர் / பிரதிவாதியும் அவர் தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 67/2012-ல் தாவா வண்டிப்பாதையானது 15 அகலத்தில் இருப்பதாக தான் கூறியுள்ளார். இரு வழக்குகளிலும் தாவா வண்டிப்பாதை சம்மந்தமாக பிரச்சனை தான் வழக்கு பிரச்சனையாக உள்ளது. இது குறித்து இம்மனுவின் மனுதாரரோ, எதிர்மனுதாரரோ ஏற்கனவே மனுக்கள் தாக்கல் செய்து நீதிமன்ற ஆணையர் நியமனம் பெற்று இரு அறிக்கைகள் மற்றும் வரைபடங்கள் வழக்கு கட்டுகளில் இருந்து வருகிறது. இந்நிலையில் மீண்டும் இரு தரப்பினருக்கும் இடையே வண்டிப்பாதையின் நீளம் மற்றும் அகலம் குறித்து பிரச்சனை இருப்பதாக கருதியோ அவர்கள் இந்த மனுவிலோ, அசல் வழக்குகளிலோ எதுவும் குறிப்பிடவில்லை. மேலும் உயர்நீதிமன்றம் C.R.P. No. 897/2015-ல் கலைச்செல்வன் எதிர் குணசீலி என்ற மனுவில் 16.04.2019 தேதியிட்ட உத்தரவில் ஏற்கனவே ஆணையர் நியமனம் செய்யப்பட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யப்பட்டிருந்தால் அதனை வழக்கு கோப்பிலிருந்து நீக்கம் செய்யாமல் மீண்டும் வழக்கறிஞர் நியமனம் பெற்று அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிட இயலாது என்றும், தரப்பினர்கள் தங்களுடைய வழக்கினை தங்களிடம் உள்ள ஆவணங்கள் மற்றும் வாய்மொழி சாட்சியங்கள் மூலம் தான் நிரூபணம் செய்ய வேண்டுமென்றும், ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடம் சாட்சியத்தின் ஒரு பகுதி தான் என்றும், ஏற்கனவே பெறப்பட்ட நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடம் வழக்கு கோப்பிலிருந்தே நீக்கம் செய்யப்படாத நிலையில் மீண்டும் ஒரு நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்ய இயலாது என்றும் முடிவு செய்துள்ளது. ஏற்கனவே வழக்கு கோப்புகளில் உள்ள இரு நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடங்களை பரிசீலனை செய்ததில் தரப்பினர்களில் யாருடைய நிலங்களின் வழியாக எந்த நிலையில் தாவா வண்டிப்பாதை செல்கிறது என்பது குறித்து தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. மேலும் தாவா பாதையில் எந்த இடத்தில் பள்ளம், மேடு, புதர்கள், செடிகொடி, மரங்கள், உயிரற்ற வேலிகள் ஆகியவை அமைந்துள்ளது என்பது குறித்தும் நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடங்களில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஏற்கனவே

**.. 6 ...**

இம்மனுவின் மனுதாரர் / வாதி இ.ம.வ. எண். 434/2013-ஐ அசல் வழக்கு எண் 67/2012-ல் முந்தைய நீதிமன்ற ஆணையரையே மீண்டும் தாவா பாதையை பார்வையிட உத்தரவிட வேண்டி மனு தாக்கல் செய்துள்ள நிலையில் அம்மனுவிலேயே தாவா பாதையை நில அளவையரின் உதவியுடன் அளவீடு செய்ய ஏன் கோரவில்லை என்ற கேள்வியும் எழுகிறது. மேற்படி மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் முன் தீர்ப்பின் அடிப்படையில் ஏற்கனவே இரு நீதிமன்ற ஆணையர் அறிக்கைகள் மற்றும் வரைபடங்கள் வழக்கு கோப்புகளில் உள்ள நிலையிலும் அதற்கு இம்மனுவின் மனுதாரர் / வாதி ஆட்சேபனைகள் தாக்கல் செய்துள்ளபோதிலும் அவற்றை நீக்கறவு செய்யாமல் மீண்டும் நீதிமன்ற ஆணையரை மனுதாரர் மனுவில் வேண்டியுள்ளவாறு நியமனம் செய்ய இயலாது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. இ.ம.வ. எண். 434/2013-ல் நீதிமன்ற ஆணையரின் 2-வது அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு இம்மனுவின் மனுதாரர் / வாதி தாக்கல் செய்துள்ள ஆட்சேபனையில் தாவா பாதையின் அளவுகள் சம்மந்தமாக எந்த சங்கதியும் குறிப்பிடவில்லை என்பது தெரியவருகிறது. எனவே மேற்படி காரணங்களுக்காகவும் மேற்படி முன் தீர்ப்பின் அடிப்படையிலும் இந்நீதிமன்றம் இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடுகிறது.

6. இறுதியாக, மனுதாரர் / வாதி தாக்கல் செய்துள்ள இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகின்றது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்துத்-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2023-ஆம் ஆண்டு, ஜூலை திங்கள், 26-ஆம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**(Sd/- N. திலகேஸ்வரி)**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**ஆத்தூர்.**

| | |
|---|---|
| மனுதாரர் / வாதி தரப்பு சாட்சிகள் : | இல்லை |
| எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பு சாட்சிகள் : | இல்லை |
| மனுதாரர் / வாதி தரப்பு சான்றாவணங்கள் : | இல்லை |
| எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்: | இல்லை |
| நீதிமன்ற சாட்சிகள் : | இல்லை |
| நீதிமன்ற சான்றாவணங்கள் : | இல்லை |

**(Sd/- N. திலகேஸ்வரி)**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

மு.மா.உ.நீ., (மு.கூ.பொ.) ஆத்தூர்.
கூ.மா.உ.நீ., ஆத்தூர்.
இ.ம.வ. எண் 1/2022
---------------
அ.வ. எண் 102/2012
அசல் / வரைவு உத்தரவுரை
நாள் : 26.07.2023.